**செய்தி வெளியீடு எண் : 211** **நாள் : 01.02.2024**

**<u>செய்தி வெளியீடு</u>**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர் 2023–2024 ஆம் கல்வியாண்டில் சிரமமின்றி கல்வி பயில பொருளாதார ரீதியாக உதவிடும் வகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் பல்வேறு கல்வி உதவித்தொகை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில், **ஒன்றிய அரசின் நிதி பங்கீட்டுடன் செயல்படுத்தப்படும் "போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம்", "ப்ரிமெட்ரிக் மற்றும் தூய்மை பணிபுரிவோர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டம்", "மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம்", "உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை திட்டம்", "பெண் கல்வி ஊக்குவிப்பு திட்டம்** போன்ற திட்டங்கள் தலையாய திட்டங்களாகும்.

2023–2024 ஆம் கல்வியாண்டில், மேற்காணும் திட்டங்களின் கீழ் தோராயமாக **14** இலட்சத்துக்கு மேற்பட்ட ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர் பயன் அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

| **திட்டம்** | **கல்வி** | **குடும்ப ஆண்டு வருமான வரம்பு** | **எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் | 11th & 12thstd, UG, PG, Ph.D. | 2.50 இலட்சம் | 6,17,645 |
| ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் | 9th & 10th std | 2.50 இலட்சம் | 3,02,054 |
| தூய்மைப்பணி புரிவோர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டம் | 1st to 10th std | வருமான வரம்பில்லை | 18,548 |
| உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை திட்டம் | UG, PG and Ph.D. students | 2.50 இலட்சம் | 15,642 |
| பெண் கல்வி ஊக்குவிப்பு திட்டம் | 3rd to 8th std | வருமான வரம்பில்லை | 4,52,452 |
| **மொத்தம்** | | | **14,06,341** |

2023–2024 ஆம் கல்வியான்டிற்கு புதுப்பித்தல் (Renewal) மாணக்கருக்கான விண்ணப்பங்கள், சென்ற ஆண்டு தரவு தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து (Tamil Nadu State Scholarship Portal – TNSSP) https;//ssp.tn.gov.in என்ற இணையதளம் மூலம் பரீசீலிக்கப்பட்டு மாணாக்கரின் வங்கி கணக்கிற்கு கல்வி உதவித்தொகை வழுங்கப்பட்டு வருகிறது. தற்போது 2023–2024–ஆம் கல்வியாண்டில் புதியதாக சேர்க்கை பெற்ற மாணாக்கர்கள் (Fresh students) கல்வி உதவித்தொகைக்கு விண்ணபிக்க 01.02.2024 முதல் மேற்காணும் இணையதளம் திறக்கப்பட்டுள்ளது. மேற்காணும் கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் பயனடைய விரும்பும் மாணாக்கர்கள் கீழ்காணும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்

2023-2024-ஆம் கல்வியாண்டிலிருந்து, கல்லூரிகளில் சேர்க்கை பெற்றுள்ள மாணாக்கர்களின் விவரங்களை **University Management and Information System (UMIS)** தரவு தளத்திலிருந்தும் மற்றும் பள்ளிகளில் சேர்க்கை பெற்றுள்ள மாணாக்கரின் விவரங்களை **Educational Management Information System (EMIS)** தரவு தளத்திலிருந்தும் **Tamil Nadu State Scholarship Portal (TNSSP)** தரவு தளத்துக்கு பதிவிறக்கம் செய்யப்படும். எனவே சம்மந்தப்பட்ட கல்வி நிறுவனங்கள் UMIS மற்றும் EMIS தரவு தளங்களில் மாணாக்கரின் விவரங்களை முழுமையாக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புதிய (Fresh) மாணாக்கர்கள் TNSSP என்ற இணையதளத்தில் மாணாக்கர்களுக்கான login-ல் ஆதார் எண்ணை உள்ளீடு செய்த பின் வரும் OTP-யினை கொண்டு மேற்காணும் இணையதளத்தில் தங்களுக்கான கல்வி உதவித்தொகையை விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பதற்கு கீழ்காணும் ஆவணங்கள் மற்றும் நெறிமுறைகள் அவசியமாகும்.

I. இணையவழியில் பெறப்பட்ட சாதிச்சான்று
II. இணையவழியில் பெறப்பட்ட வருமானச் சான்று. (இணைய வழி வருமான சான்றானது மாணாக்கர்/குடும்ப தலைவரின் பெயரில் பெற வேண்டும்)
III. மாணாக்கர்களின் வங்கி கணக்கானது ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டு (**Seeding**) செயல்பாட்டில் (**Active**) உள்ளதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு ஆதார் எண்ணை வங்கிக் கணக்குடன் இணைத்தவர்கள்(Not seeded), தங்களது வங்கி கிளையை அணுகி ஆதார் எண்ணை வங்கியுடன் Seed செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் . ஆதார் இணைக்கப்பட்டுள்ளதா என்ற விவரத்தினை "My Aadhar-UIDAI" என்ற இணையத்தில் உறுதி செய்துகொள்ளலாம். ஆதார் எண்ணை வங்கியுடன் இணைக்காத மாணாக்கருக்கு கல்வி உதவித்தொகை வழங்க இயலாது .

மேற்கண்ட விவங்களை மாணாக்கர்களுக்கு தெரிவித்து அவர்களை கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்துமாறு தொடர்புடைய கல்லூரி / பள்ளி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| கல்வி உதவித்தொகை இணைய முகவரி (website address) | **https;//ssp.tn.gov.in** |
| கல்வி உதவித்தொகை தொடர்பான சந்தேகங்களுக்காண தொலைபேசி எண். (call centre no.) | **1800-599-7638** |

செயலாளர்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in